# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) – 2009/2010 HELD IN AUGUST 2010

## BBA/COM 12 (II) – COMPUTER LITERACY AND BASIC APPLICATIONS - II

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக** **நேரம்: 02 மணித்தியாலங்கள்**

---

**(01)**

1. கணிணி வலைப்பின்னலில் Mbps என்பது குறித்து நிற்பது
   a. Mega Bytes Per Second
   b. Mega Bits Per Second
   c. Mega Bitmap Per Second
   d. None of the above

2. பின்வருவனவற்றுள் எது ஒரு வலிதான e-mail முகவரியாகும்?
   a. ict.seu(at)@seu.ac.lk
   b. ict/seu@seu.ac.lk
   c. ict.seu@seu.ac.lk
   d. ict@seu@seu.ac.lk

3. இணையத்தில் ஏராளமான தொலைக்காட்சி சேவைகள் காணப்படுகின்றன. இவற்றில் பயன்படுத்தப்படும் தொடர்பாடல் முறைமை (Communication Protocol)
   a. TCP
   b. UDP
   c. IPV
   d. None of the above

4. URL என்பது
   a. Universal Resource Locator
   b. Uniform Resource Locator
   c. Universal Results Locator
   d. None of the above

5. 20 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள, ஒவ்வொன்றிலும் 100 கணிணிகளைக் கொண்ட இரண்டு கட்டிடங்களை வலைப்பின்னலில் இணைப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய சிறந்த Cable
   a. Coaxial
   b. Fibre Optic
   c. Twisted Pair
   d. None of the above

6. கணிணி வலையமைப்பில் இரண்டு LAN களை இணைக்கப்பயன்படும் வன்பொருள்
   a. Switch
   b. Hub
   c. Router
   d. Repeater

7. MS Word 2003 இல் ஒரு ஆவணத்தின் பெயரை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் Shortcut Key
   a. F3
   b. F6
   c. F9
   d. F12

8. பயனாளர் கணிணிக்காக அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது மின்னணுசார் விரிதாள் மென்பொருள் தொகுதி
   a. Excel
   b. Visicalc
   c. Lotus 1-2-3
   d. Openoffice.org Calc

9. MS Excel இல் குறிப்பிட்ட ஒரு Cell இற்குள் காணப்படும் பெறுமானத்தில் மாற்றங்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் Shortcut Key
   a. F1
   b. F2
   c. F3
   d. F4

10. MS Excel இல் குறிப்பிட்ட ஒரு Cell இற்குள் காணப்படும் பெறுமானத்தை Absolute பண்ணுவதற்காகப் பயன்படுத்தப்படும் Shortcut Key
   a. F1
   b. F2
   c. F3
   d. F4

(மொத்தம்: 10 புள்ளிகள்)

**(02)**

01. கணிணி வலையமைப்பு என்றால் என்ன? தென்கிழக்குப் பல்கலைக்கழகமானது அங்கு காணப்படும் 500 கணிணிகளையும் ஏனைய கணிணி சார் உபகரணங்களையும் வலைப்பின்னல் படுத்தியுள்ளது. இப்பல்கலைக்கழகம் இவ்வாறு வலைப்பின்னல் படுத்தியதன் மூலம் அநுபவிக்கக்கூடிய நன்மைகளைப் பட்டியல்படுத்துக.

(05 புள்ளிகள்)

02. கணிணி வலையமைப்பில் காணப்டும் Topology களைப் பட்டியல்படுத்திச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

03. கணிணி வலைப்பின்னலில் பின்வரும் வன்பொருட்களின் பிரதான பணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக

a. Router
b. BNC Connector
c. Repeater
d. Exchange Server
e. Wireless Access point

(10 புள்ளிகள்)

**(மொத்தம்: 25 புள்ளிகள்)**

## (03)

01. சொல்முறை வழிப்படுத்தல் (Word Processing) என்பது யாது? சுருக்கமாக விளக்குக. இதற்காகப் பயன்படும் மென்பொருட்களில் நான்கினைப் பட்டியல்படுத்துக.

(04 புள்ளிகள்)

02. சாதாரண தட்டச்சு இயந்திரத்துடன் ஒப்பிடுகையில், சொல்முறை வழிப்படுத்தல மென்பொருளில் காணப்படும் அநுகூலங்களில் 05 இனைச் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

03. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளான MS Word 2003 குறித்துப் வினாக்களுக்கு விடையளிக்குக.

a. பின்வரும் Shortcut Key களைப் பிரயோகிக்கும் போது அவற்றின் விளைவைக் குறிப்பிடுக.

i. Alt + Shift + D
ii. Ctrl + Shift + D
iii. Ctrl + Shift + =
iv. Shift + F7

(04 புள்ளிகள்)

b. பின்வரும் பணிகளைச் செய்வதற்கான கட்டளைகளின் படிமுறைகளைத் தெளிவாக எழுதுக.

i. ஒரு நிரலை வரிசைப் படுத்துவதற்கு
ii. Footnote ஒன்றை உட்புகுத்துவதற்கு
iii. ஒரு ஆவணத்தில் 03 Column களை ஏற்படுத்துவதற்கு
iv. Watermark ஒன்றை உட்புகுத்துவதற்கு

(16 புள்ளிகள்)

**(மொத்தம்: 30 புள்ளிகள்)**

**(04)**

01. கீழுள்ள மின்னணு விரிதாளை அடிப்படையாக வைத்து வினாக்களுக்கு விடையளிக்குக

| | A | B | C | D | E | F | G |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | S.No | SalesRep's Name | Region | Basic Salary | Sales | Insentives | Net Salary |
| 2 | 1 | Shota | East | 24,000.00 | 16,000.00 | | |
| 3 | 2 | Raja | South | 25,000.00 | 21,000.00 | | |
| 4 | 3 | Haja | South | 26,500.00 | 6,500.00 | | |
| 5 | 4 | Kanesh | West | 23,450.00 | 17,500.00 | | |
| 6 | 5 | Dale | North | 23,450.00 | 4,750.00 | | |

பின்வருவனவற்றைச் செய்வதற்கான Formula வை எழுதுக

a. ஆகக்கூடிய விற்பனைப் பெறுமதியைக் காண்பதற்கு

b. எத்தனை Sales Rep (விற்பனைப் பிரதிநிதிகள்) இருக்கின்றார்கள் என்று எண்ணிக் கணக்கெடுப்பதற்கு

(04 புள்ளிகள்)

c. பின்வரும் நிபந்தனையை அடிப்படையாகக் கொண்டு, F2 இல் வர வேண்டிய Incentive (ஊக்குவிப்பு) தொகையைக் கணிப்பிடுவதற்கு

| **Criteria** | **Incentives** |
|---|---|
| Sales< 5,000 | 05% of sales |
| Sales > =5,000 | 07.5% of sales |
| Sales > =10,000 | 10% of sales |
| Sales > =20000 | 30% of sales |

(06 புள்ளிகள்)

d. தேறிய சம்பளத்தை (Net Salary) கணிப்பதற்கு (Net salary= Basic Salary + Incentives).

(03 புள்ளிகள்)

e. Region ஐ அடிப்படையாக வைத்து வரிசைப்படுத்துவதற்கு

(03 புள்ளிகள்)

f. Sales ஐயும் Region ஐயும் அடிப்படையாக வைத்து Colum Chart ஒன்றை உருவாக்குவற்கு

(05 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றைச் செய்வதற்குரிய படிமுறைகளைச் சுருக்கமாக எழுதுக

a. ஒரு Row இனை அழிப்பதற்கு
b. ஒரு Worksheet இன் பெயரை மாற்றுவதற்கு.

(04 புள்ளிகள்)

03. பின்வரும் Function களின் பயன்பாட்டைப் பொருத்தமானன உதாரணத்துடன் சுருக்கமாகக் கூறுக

a. SQTR()
b. COUNTA()
c. COUNTBLANK()
d. SLN()

(10 புள்ளிகள்)

**(மொத்தம்: 35 புள்ளிகள்)**